செப்டம்பர் - 8

**"உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாகிறான் ."**

**- யாக் 4 : 4**

தன்னுடைய ஜனங்கள் தெய்வீக சிநேக ஐக்கியம், அல்லது உலக சிநேக ஐக்கியம், இவைகள் இரண்டிலொன்றை தெரிந்துகொண்டு மற்றதை இழக்க வேண்டுமென்று தேவன் தீர்மானத்தோடு இந்த விஷயத்தை அப்படிப்பட்ட ஒரு நிலையில் வைத்திருக்கிறார். ஏனென்றால், எந்தக் காரியங்களை கர்த்தர் விரும்பிகிறாரோ, அவைகளை உலகத்தின் (உலகப்பற்றுள்ளவன்) வெறுக்கக் கூடியதாகவும், உலகத்தால் எவைகளை விரும்புகிறானோ, அந்தக் காரியங்கள், அதாவது தீமையின் கிரியைகள் தீமையான எண்ணங்களும், தூஷணமும் கர்த்தருடைய பார்வையில் அருவருப்பாய் இருக்கின்றன. இப்படிப்பட்ட காரியங்களை நேசிக்கிறவர்களும், அப்பியாசிக்கிறவர்களும் அவருடைய ஐக்கியத்தை இழக்கிறார்கள் அவர்கள் அவருடைய ஆவியை உடையவர்கள் அல்ல. "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல."

**- Z ’99, 70 (R 2442)**

இவ்வுலக சிநேகமானது, இப்பொழுதிருக்கிற காரியங்களின் ஒழுங்கிற்கு இணக்கமாக உள்ளவர்கள் மற்றவர்களுக்குக் கொடுக்கிற பிரியத்தையும், ஒப்புதலையும் நம்பிக்கையையும் குறிக்கிறது. இப்பொழுதிருக்கிற ஒழுங்கு தெய்வீக குணம், ராஜரீகம் இவைகளின் தத்துவங்களும் இணக்கமாக இல்லத்திருக்கிற காரணத்தால் உலகம் கர்த்தருடைய ஜனங்களை சிநேகிக்கமால், அந்த சிநேகத்தை இப்பொழுதிருக்கிற ஒழுங்கை நேசிக்கிறவர்களுக்குக் கொடுக்கிறது. உலகப்பற்றுள்ளவர்கள் இருதயத்தில் தேவனுக்குப் பகைவராயிருக்கிறார்கள். இவர்களுக்கு ஊடே சிநேகம் இல்லாதிருக்கிறதினாலே உலகத்தின் சிநேகத்தைப் பெறுவது நாம் தேவனுக்குப் பகையாகிறோம் என்பதை அவசியமாகவே குறிக்கிறது. இது உலக சிநேகத்திற்காக செலுத்துகிற பெரிய கிரயமாகும்.

**- P ’32, 136.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**1சாமு 8:19,20; சங் 49:16-18; 73:2-22; பிர 2:1-12; 11:9,10; மத் 16:26; லூக் 8:14; யோவா 15:19; ரோம 12:2; 1கொரி 7:29-31; 2தீமோ 3:2-8; 1யோவா 2:15-17**

**கோபுர வாசிப்பு : Z ’11, 56 (R 4765).**

**வினாக்கள் : நான் இந்த வாரத்தில் உலகத்தானாக அல்லது ஆவிக்குரியவனாக இருந்தேனா? நான் ஏன் அப்படியிருந்தேன்? எவ்வாறு நான் அப்படி ஆனேன்?**